1984 பிப்ரவரி 21]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றி இப்பொழுது எந்தவிதமான திட்டவட்டமான ஒரு செய்தியும் நம்மிடத்தில் இல்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, காஞ்சீபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா புற்றுநோய் நிலையத்தை இன்டர்நேஷனல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டாக மாற்றுவதற்கு அரசு ஏதேனும் உத்தேசித்துள்ளதா ? அம்மருத்துவ மனையின் வளர்ச்சிக்கு என்னென்ன செயல் திட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காஞ்சீபுரத்தில் பேரறிஞர் அண்ணாவினுடைய பெயரிலே இயங்குகின்ற அந்த மருத்துவமனையைப் பொறுத்த வரையில், ஏற்கனவே 100 படுக்கைகளுக்கு ஒரு மருத்துவமனை இருக்கிறது; இப்பொழுது 250 படுக்கைகளுக்கு ஒரு மருத்துவ மனையாக, நல்லதொரு பெரிய மையமாக, ஸ்தாபனமாக ஏற்படுத்த ஏறத்தாழ 5 கோடி ரூபாய் செலவில் அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதைப்பற்றி கவலை தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் உடனடியாக இயங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

டாக்டர் கே. சௌரிராஜன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறிப்பாகக் கருப்பையில் ஏற்படும் புற்றுநோயைக் குணப்படுத்துவதற்குத் தனியான இடங்கள் மதுரை, சென்னையில் தான் இருக்கின்றன. நாம் மருத்துவக் கல்லூரி நடத்திக் கொண்டிருக்கிறோம். கோவை, திருநெல்வேலி, தஞ்சாவூர் என்று இப்படி மூன்று இடங்களில் மருத்துவக் கல்லூரிகளை நாம் நடத்துகிறோம். அந்தக் கல்லூரிகளை ஒட்டிய மருத்துவமனைகளில், கருப்பையில் உருவாகக்கூடிய நோயினைப் பற்றி அறிந்துகொள்கின்ற வகையிலே ஒரு ஸ்பெஷல் கான்சர் டிப்பார்ட்மென்ட் இருக்கின்றதா ? இல்லை என்றால் அவ்வாறு உருவாக்க உடனடியாக அரசு முன்னுரிமை அளித்து ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; தலைவர் அவர்களே, இது எனக்கு மிகவும் துணையாக இருக்கக்கூடிய கேள்வி. இருப்பினும் நிதிநிலையைப் பொறுத்துத்தான் இதைச் செய்ய வேண்டும்.

Primary Complex என்னும் காசநோய்க்கான அறிகுறிகள்

108 *(வினா எண் 15668)—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Primary complex என்னும் காசநோயின் அறிகுறிகள் பெரும்பாலும் எல்லாக் குழந்தைகட்கும் ஏற்பட்டுள்ளது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதனை ஒழிக்க அரசு ஏதேனும் Crash Programme (தீவிரத் திட்டம்) வைத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ப்ரைமரி காம்ப்ளக்ஸ். காசநோய்க்கு சமமாகக் கருதப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோயை சரியாகக் கண்டறிய ப்ரைமரி காம்ப்ளஸ்-க்கான அறிகுறிகளுடன் காணப்படும் சிறுவர்களை முறையாக சோதனை செய்து பார்த்தபின் அவர்களைக் கவனிப்பில் வைக்கவோ அல்லது சிகிச்சை அளிக்கவோ செய்யப் படும்.

(ஆ) காசநோய்த் தொற்றின் இயற்கையான விளைவுதான் ப்ரைமரி காம்ப்ளக்ஸ் எனப்படுவது. அதற்குத் தேவையான சிகிச்சை வசதிகள் அனைத்து அரசினர் மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சிறுவர்களுக்கான மருத்துவ மனைகளிலும், பொது மருத்துவமனைகளிலுள்ள சிறுவர்களுக் கான பகுதியிலும் உள்ளன. சிறுவர்களுக்கு பிற்காலத்தில் காச நோய் தோன்றாமல் இருப்பதற்கு வேண்டிய அளவில் பி.சி.ஜி. தடுப்பு ஊசி அளிக்கப்படுகின்றது.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, ப்ரைமரி காம்ப்ளக்ஸ் என்கின்ற நோய் பெரும்பாலும் நகரத்திலே இருக்கின்ற எல்லா குழந்தைகளுக்கும் வருகின்றது. அவ்வாறு வருவதற்கான காரணம் என்ன? நோய் வந்ததற்குப் பிறகு தடுப்பதற்குப் பதில் நோய் வருவதற்கு முன்பாகவே அதனைத் தடுக்கின்ற வகையிலே ஏதேனும் சிறப்பான திட்டங்களை அரசு வைத்திருக்கின்றதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பி.சி.ஜி. என்பதைப் பொறுத்தவரையில் 1980 ஆம் ஆண்டி லிருந்து 1982 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதி வரையில் 39,14,581 பேருக்கு பி.சி.ஜி. வேக்ஸினேஷன் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, ப்ரைமரி காம்ப்ளக்ஸ் வருகின்ற, ஏழைக் குழந்தைகளின் தாய்மார்கள் இந்த வியாதியினைப் பற்றித் தெரியாமல் அவர்கள் வைத்தியம் செய்யாமலே இருக்கிறார்கள். எனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் டாக்டர்களை கிராமங்களுக்கு அனுப்பி அவர் களை நேரடியாகச் சந்தித்து அந்த நோய் பற்றித் தெரிந்து குணப்படுத்துவதற்குரிய மருந்துகளைக் கொடுப்பதற்குரிய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் நாம் குழந்தைகளைப் பரிசோதனை செய்து கொண்டிருக்கிறோம். அதாவது பெரிய அளவில், அமைதியான புரட்சியாக சத்துணவு மையங்களில் டாக்டர்களை

அனுப்பி குழந்தைகளைப் பார்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். சத்துணவு மையங்களில் இருக்கக்கூடிய குழந்தைகளின் தாய்மார்கள் எப்படி எல்லாம் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்கின்ற விவரங்களையும் புத்திமதிகளையும் கூறுகின்ற வகையில் அதாவது ஹெல்த் எஜுகேஷன் ஃபார் சில்ட்ரன் இன் தீஸ் சென்டர்ஸ் என்ற வகையிலே சொல்கின்ற அளவுக்கு தீவிரப்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகின்றோம். இதன் மூலமாக முன்பிருந்ததை விட சென்ற ஓரிரு ஆண்டுகளில் நல்ல வெற்றி கிடைத்திருக்கின்றது.

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, பி.சி.ஜி வேக்ஸினேஷனை, ப்ரமரி காம்ப்ளக்ஸ் வராமல் இருப்பதற்காகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பி.சி.ஜி. கொடுக்கப்பட்ட குழந்தைகளில் எத்தனை பேருக்கு ப்ரைமரி காம்ப்ளக்ஸ் வந்திருக்கின்றது; பி.சி.ஜி. கொடுக்காத குழந்தைகளில் எத்தனை சதவீதம் ப்ரைமரி காம்ப்ளக்ஸ் வந்திருக்கின்றது என்ற புள்ளிவிவரம் அமைச்சரிடத்திலே இருக்கின்றதா? இப்போதுள்ள ஒரு லேட்டஸ்ட் பரிசோதனையின் மூலம் பி.சி.ஜி. கொடுத்தாலும் எந்தவிதமான லாபமும் இல்லை என்று அதாவது The percentage of the incidence is the same in both control as well as B.C.G. immunised population என்று புதுத் தகவல் வந்து கொண்டிருக்கின்றது. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? எனவே இந்தப் ப்ரோகிராம் கைவிடப்படுகின்றதா? இராஜாஜி அவர்கள் சொன்னது போல் அதனைக் கைவிடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக இருந்து வருகின்ற ஒரு கான்ட்ரோவர்சியாகும் இது. இப்போது ஒட்டு மொத்தமாக பி.சி.ஜி. கொடுப்பது For the third world, B.C.G. vaccination is the only answer to prevent or reduce the onset of (a) primary complex (b) tuberculosis. This is the view of the World Health Organisation (W.H.O).

திரு மா. சின்னராசு: தலைவர் அவர்களே, ப்ரைமரி காம்ப்ளக்ஸ் என்ற நோய் இளம் குழந்தைகளாக இருக்கின்ற போது வருவதால் அந்நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்த பருவத்தில் என்லார்ஜ்மென்ட் ஆஃப் ஹார்ட் என்ற ஒரு வியாதிக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்று மருத்துவர்கள் சொல்வது உண்மையா? அப்படி இருந்தால் அதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, ப்ரைமரி காம்ப்ளக்ஸ் என்ற அந்த வியாதியைக் குணப்படுத்தினாலே போதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.